# பத்திரிக்கை செய்தி

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.நீலகண்டன் அவர்கள் சட்ட விரோதமாக பார் நடத்துபவர்களிடமிருந்து பணம் வசூல் செய்வதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் இன்று 28.12.2018ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலர்களுடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர்கள் இணைந்து மாலை 17.45 மணி முதல் 19.15 மணி வரை ஆலங்குடி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் ஆய்வின்போது காவல் ஆய்வாளர் மதுவிலக்கு பிரிவு திரு.நீலகண்டனிடமிருந்து கணக்கில் வராத ரூ.1,17,060/–ம், காவல் ஆய்வாளரின் வாகன ஓட்டுநர் முதல் நிலைக்காவலர் 113 திரு.சுரேஷ் என்பவரிடமிருந்து கணக்கில் வராத ரூ.8,590/– ம் ஆக மொத்தம் ரூ.1,25,650/–ம் கைப்பற்றப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.